RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 221 | ஆகஸ்டு.13 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







## நவ.1, 2ல் ‘டெட்’ தகுதித் தேர்வு: ஆசிரியர் தேர்வு வாரியம் திடீர் அறிவிப்பு

சென்னை, ஆக.13-

இந்த ஆண்டுக்கான ‘டெட்’ தகுதித் தேர்வு நவம்பர் 1 மற்றும் 2ம் தேதி நடத்தப்படும் என ஆசிரியர் தேர்வு வாரியம் திங்கள்கிழமை திடீரென அறிவித்துள்ளது. இதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவும் உடனடியாக தொடங்கியது.

மத்திய அரசின் கட்டாய கல்வி உரிமை சட்டத்தின்படி ஒன்று முதல் 8ம் வகுப்பு வரை பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் டெட் எனப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம். இடைநிலை ஆசிரியர்களுக்கு டெட் தாள் 1ம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு டெட் தாள் 2ம் நடத்தப்படுகின்றன. தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (என்சிடிஇ) விதிமுறையின்படி ஆண்டுக்கு 2 தடவை டெட் தேர்வு நடத்தப்பட வேண்டும். தமிழகத்தில் கடைசியாக 2022ம் டெட் தேர்வு நடத்தப்பட்டது. அதன்பிறகு கடந்த 3 ஆண்டு காலமாக டெட் தேர்வு நடத்தப்படவில்லை.




தற்போது பதவி உயர்வுக்கும் டெட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், டெட் தேர்வுக்கான அறிவிப்பு எப்போது வெளியாகும் என பணியில் உள்ள ஆசிரியர்களும், அரசு பணி வாய்ப்புக்காக காத்திருக்கும் ஆசிரியர்களும் மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்து வந்தனர். இந்நிலையில, டெட் தேர்வுக்கான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் திடீரென இன்று மாலை வெளியிட்டது.

இது தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் எஸ்.ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இந்த ஆண்டு ஆசிரியர் தகுதித்தேர்வு தாள்1 மற்றும் தாள்2 நடத்துவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியம் உத்தேசித்து அதற்கான அறிவிப்பை டிஆர்பி இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. அந்த அறிவிப்பில் டெட் தேர்வுக்கான கல்வித்தகுதி மற்றும் ஆன்லைன் விண்ணப்ப நடைமுறை தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தேர்வுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க செப்டம்பர் மாதம் 8ம் தேதி வரை மாலை 5 மணி வரை காலஅவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. டெட் தேர்வு அறிவிக்கை தொடர்பான கோரிக்கை மனுக்கள் trbgrievances@tn.gov.in என்ற மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

நவம்பரில் தேர்வு: டிஆர்பி அறிவிப்பின்படி, டெட் தாள்1 தேர்வு நவம்பர் 1ம் தேதியும், தாள்2 தேர்வு நவம்பர் 2ம் தேதியும் நடத்தப்பட உள்ளன. தேர்வுக்கு விண்ணப்பிக்க வயது வரம்பு கட்டுப்பாடு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தாள் 1 தேர்வுக்கு இடைநிலை ஆசிரியர்களும், தாள் 2 தேர்வுக்கு பிஎட் பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். பொதுப்பிரிவினர் 150க்கு 90 மதிப்பெண்ணும், இடஒதுக்கீட்டுப் பிரிவினர் (பிசி, பிசிமுஸ்லிம், எம்பிசி, எஸ்சி எஸ்டி) 150க்கு 82 மதிப்பெண்ணும் பெற்றால் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்படுவர்.

டெட் தேர்வில் இந்த ஆண்டு ஒருமுறை மட்டும் எஸ்டி வகுப்பினருக்கு மதிப்பெண் தளர்வு அளித்து அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, அவர்கள் டெட்தேர்ச்சிக்கு 150க்கு 60 மதிப்பெண் (40 சதவீதம்) பெற்றால் போதும் என்பது குறிப்பிடத்தக்கது. டெட் தேர்வுக்கு உரிய கல்வித்தகுதியுடைய ஆசிரியர்கள் https://www.trb.tn.gov.in என்ற இணையதளத்தை பயன்படுத்தி ஆன்லைனில் செப்டம்பர் 8ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

## ‘தாயுமானவர் திட்டம்’ இந்தியாவுக்கே முன்மாதிரி முயற்சி: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஆக.13-

70 வயதுக்கு மேற்பட்ட 20 இலட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள் - 1 லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 21 இலட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் பயனடையும் ‘தாயுமானவர் திட்டம்’ உள்ளிட்ட அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச் சென்று கொடுப்பது, இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சி என்று முதல்வர் ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

‘தாயுமானவர் திட்டம்’ தொடங்கிவைக்கப்படுவது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவு மூலம் கருத்து தெரிவித்துள்ளார்.



அதன் விவரம் வருமாறு: வணக்கம்! நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்! அந்த வரிசையில், என்னுடைய மனதிற்கு பிடித்த திட்டமாக உருவாகியிருப்பதுதான், இந்த தாயுமானவர் திட்டம்!

கூட்டுறவுத் துறை சார்பில், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்! இப்படி, அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச் சென்று கொடுப்பது, இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சி!

ஒரு திட்டத்தை அறிவிப்பதோடு, கடமை முடிந்துவிடுவதாக நாம் நினைப்பதில்லை! அந்த திட்டத்தின் பலன் பயன், கடைக்கோடி மனிதரையும் சென்று சேருகிறதா என்று கண்காணிப்பதையும் கடமையாக நினைக்கிறேன்! அப்படி, வயது முதிர்ந்தோரும் மாற்றுத் திறனாளிகளும் ரேசன் கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்குவதில் ஏற்படும் சிரமத்தை உணர்ந்து, இந்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்!



இந்தத் திட்டத்தை 34 ஆயிரத்து 809 நியாய விலைக் கடைகளில் செயல்படுத்த போகிறோம்! 70 வயதுக்கு மேற்பட்ட 20 இலட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என்று 21 இலட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் இந்த திட்டத்தால் பயனடைய போகிறார்கள்! ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் குடிமை பொருட்கள் உங்கள் வீடு தேடி வந்துவிடும்! இதற்காக கூட்டுறவுத் துறைக்கு ஆகப்போகும் 30 கோடியே 16 இலட்சம் ரூபாயை கூடுதல் செலவாக கருதாமல் மக்களுக்கு செய்யும் உயிர்காக்கும் கடமையாக நாங்கள் நினைக்கிறோம்! இது கூட்டுறவுத் துறையின் மிகப்பெரிய சேவை! அந்தத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், கடை விற்பனையாளர்கள் செய்யப் போகும் மிகப்பெரிய கடமை!

தமிழ்நாடு முழுவதும் 37 ஆயிரத்து 328 நியாய விலைக் கடைகள் இருக்கிறது! இதில், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2 ஆயிரத்து 394 புதிய நியாய விலைக் கடைகளை திறந்திருக்கிறோம்! தலைவர் கலைஞர் வழியில், இந்த நியாய விலைக் கடைகளை நாம் முறையாக சிறப்பாக நடத்துவதால்தான், தமிழ்நாடு இன்றைக்கு பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக இருக்கிறது! இந்த ரேசன் கடைகளின் பயன்பாட்டை இன்னும் எளிமையாக்க முயற்சிகள் எடுத்திருக்கிறோம்!

இந்த நேரத்தில், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலவலர்களுக்கு நான் வைக்கும் வேண்டுகோள் என்பது இந்த திட்டத்தின் நோக்கம் நூறு விழுக்காடு நிறைவேறும் வகையில் உங்களின் பணி அமைய வேண்டும்! உங்களை எதிர்பார்த்து காத்திருக்கும் முதியவர்களும் மாற்றுத்திறனாளிகளும் மனம் குளிரும் வகையில் நீங்கள் கனிவாக நடந்துகொள்ள வேண்டும்! நீங்கள் பெறும் நல்ல பெயர்தான், ஆட்சிக்கு கிடைக்கும் பாராட்டு.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் 135 மின்சார ஏசி பேருந்துகள் சேவை: உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

பெரும்பாக்கம், ஆக.13-

சென்னை அருகே பெரும்பாக்கத்தில் புதிதாக 135 மின்சார ஏசி பேருந்துகள் சேவையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். தமிழகத்தில் முதன்முறையாக சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் ரூ.208 கோடி மதிப்பில் 120 புதிய தாழ்தள மின்சார பேருந்துகளின் சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூன் மாதம் தொடங்கி வைத்தார்.

இந்நிலையில் செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கம் பணிமனையில் இருந்து ரூ.233 கோடி மதிப்பீட்டில் 55 மின்சார ஏ.சி. பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சார பேருந்துகள் என மொத்தம் 135 மின்சார பேருந்துகளின் சேவைகள், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் ரூ.49.56 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனை ஆகியவற்றின்



தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று பேருந்து சேவையை தொடங்கி வைத்தார். பின்னர் பேருந்தில் பயணம் மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், எம்எல்ஏக்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் த.பிரபு சங்கர், செங்கை ஆட்சியர் தி.சினேகா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ், நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டத்தின் அடிப்படையில் உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பங்களிப்புடன் டீசலில் இயங்கும் பேருந்துகளுக்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பிலாத இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரப் பேருந்துகளை இயக்கும் நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.


அதன்படி பெரும்பாக்கத்தில் மின்சார பேருந்துகளை பராமரிப்பதற்காக புனரமைக்கப்பட்ட பணிமனையும், 135 தாழ்தள மின்சாரப் பேருந்துகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், மகளிருக்கு பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில், தாழ்தள மின்சாரப் பேருந்துகளில், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகளில் விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திர பயணச் சீட்டு ரூ.2,000 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக துணை முதல்வர் பெரும்பாக்கத்தில் இயங்கி வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் வில்சன் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.2 கோடி மற்றும் சி.எம்.டி.ஏ நிதி ரூ.1 கோடி என மொத்தம் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை திறந்து வைத்தார்.

## திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என அழைக்க என்ன ஆதாரம் உள்ளது? ஐகோர்ட் கேள்வி

மதுரை, ஆக.13-

‘திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என அழைக்க என்ன ஆதாரம் உள்ளது?’ என உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. திருப்பரங்குன்றம் மலையில் ஆடு, கோழி பலியிடவும், அசைவ உணவு பரிமாறவும் தடை விதிக்கக் கோரிய வழக்கில் 2 நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு வழங்கியதால் இந்த வழக்குகள் 3வது நீதிபதி விசாரணைக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி ஆர்.விஜயகுமார் விசாரித்து வருகிறார்.



இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, “திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலைஎன அழைக்க என்ன ஆதாரம் உள்ளது? ஆடு, கோழி பலியிட்டு கந்தூரி விழா நடத்த அனுமதி உண்டா? நெல்லித்தோப்பு பகுதியில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்துவதற்கு அனுமதி இருக்கிறதா?” என நீதிபதி கேள்வி எழுப்பினார். இதற்கு மனுதாரர்கள் தரப்பில், “திருப்பரங்குன்றம் மலையில் ஆடு, கோழி பலியிடுவதால் மலையின் புனிதம் கெடும், தீட்டு ஏற்படும்” என வாதிடப்பட்டது.

அரசு தரப்பில், “தீட்டு என்பதே மனித குலத்துக்கு எதிரானது. தீட்டு என்பது சாதியிலோ, மதத்திலோ, மனிதர்களுக்குள்ளோ இருக்கக் கூடாது என்பதுதான் தமிழக அரசின் நிலைப்பாடு. மிகவும் பிரபலமான அழகர்கோவிலில் பதினெட்டாம்படி கருப்புக்கு கிடா வெட்டிய பிறகுதான் பெருமாளையே தரிசிக்க செல்கின்றனர்.

அவ்வாறு இருக்கும் போது எப்படி இது தீட்டாகும்? எனவே தமிழக அரசு தீட்டு என்ற சொல்லை எந்த விதத்திலும் அனுமதிக்காது” என வாதிடப்பட்டது. மேலும் அரசு தரப்பில், திருப்பரங்குன்றம் மலையின் ஒரு பகுதி சிக்கந்தர் மலை என அழைப்பதற்கான வருவாய்த் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதேபோல், நெல்லித்தோப்பு பகுதியில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்துவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தர்கா பகுதியில் ஆடு, கோழி பலியிடுவதற்கு எவ்வித தடையும் இல்லை.

ஒருவரின் மத வழிபாட்டில் மற்றொருவர் தலையிட முடியாது. இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு என்றும் வாதிடப்பட்டது. இதையடுத்து மத்திய தொல்லியல் துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஆக.13க்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

## தகாத உறவுக்காக மகன், மகளை கொன்ற அபிராமி : சாகும்வரை சிறை தண்டனையை எதிர்த்து ஐகோர்ட்டில் மேல்முறையீடு

சென்னை, ஆக.13-

காஞ்சிபுரம் மகிளா நீதிமன்றம் விதித்த சாகும் வரை ஆயுள் தண்டனையை ரத்து செய்யக் கோரி அபிராமி மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளார். குன்றத்தூர் அருகே உள்ள மூன்றாம் கட்டளைப் பகுதியைச் சேர்ந்தவர் விஜய் (30). இவர் தனியார் வங்கியில் பணி செய்து வருகிறார். இவர், அபிராமி (25) என்ற மனைவி, அஜய் (7) என்ற மகன், கார்னிகா (4) என்ற மகளுடன் வசித்து வந்தார். அபிராமிக்கும், அருகாமையில் உள்ள பிரியாணி கடை ஒன்றில் பணி செய்து வந்த மீனாட்சி சுந்தரத்துக்கும் பழக்கம்



ஏற்பட்டுள்ளது. இந்தப் பழக்கம் நாளடைவில் முறை தவறிய உறவாக மாறியது. இருவரின் விவாகரம் வெளியில் தெரியவர, அவர்களை வீட்டில் கண்டித்தனர். இதனைத் தொடர்ந்து அபிராமியின் கணவரையும், இரு குழந்தைகளையும் கொன்றுவிட்டு வீட்டை விட்டு வெளியேற அபிராமியும், மீனாட்சி சுந்தரமும் கடந்த 2018ம் ஆண்டு முடிவு செய்தனர்.

இவர்கள் வீட்டை விட்டு வெளியேறியதால் மூவரும் தற்கொலை செய்து கொண்டனர் என்பதுபோல் காட்டுவதற்கான விஜய் மற்றும் குழந்தைகள் அஜய், கார்ணிகா ஆகியோருக்கு உணவில் தூக்க மாத்திரகளை அதிகமாக கலந்து அபிராமி கொடுத்துள்ளார். இதில் குழந்தை கார்ணிகா மட்டுமே இறந்தார். மறுநாள் காலையில் விஜய் வேலைக்குச் சென்றுவிட்டார். மயக்க நிலையில் இருந்து குழந்தை அஜய்யை கழுத்தை நெறித்து கொன்றார். இந்த வழக்கு காஞ்சிபுரம் மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ப.உ.செம்மல். குற்றம்சாட்டப்பட்ட அபிராமி, மீனாட்சி சுந்தரம் இருவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். இந்த ஆயுள் தண்டனையை ரத்து செய்ய கோரி உயர்நீதிமன்றத்தில் அபிராமி மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். சாகும் வரை ஆயுள் தண்டனை என்ற தீர்ப்பை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் மனுவில் அவர் கோரிக்கை விடுத்தார். இதனை விசாரித்த உயர்நீதிமன்றம், அபிராமி மேல்முறையீட்டு மனுவுக்கு காவல்துறை பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

## அரசுக்கு சொந்தமான கடைகளில் உள்ள சிக்கல்களை தீர்க்க குழு அமைப்பு

சென்னை, ஆக.13-

ஊராட்சிகளுக்கு சொந்தமான கடைகள், வணிக வளாகங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசு குழு அமைத்துள்ளது. வாடகை



நிலுவை, இடப் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை தீர்க்கும் வகையில் 7 உறுப்பினர்கள் இக்குழுவில் இடம் பெற உள்ளனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம்,தோவாளை தாலுகா பகுதியில் கட்டுமான தேவைகளுக்கு கொண்டு செல்லப்படும் ஜல்லி,எம்சாண்ட் எடுத்துச் செல்லும் டெம்போக்களை போலீசார் தடுத்து, விதிகளை மீறி செயல்படுவதாக குற்றம்சாட்டி வழக்கு பதிவு செய்து, தொடர்ந்து அபராதம் விதித்து வருவதை கண்டித்து இன்று கன்னியாகுமரி டெம்போ உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் நல சங்கம் சார்பில் காலவரையற்ற வேலை நிறுத்தம் போலீசின் தவறான கெடுபிடியால் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டுநர் குடும்பத்துடன் வாழ்வாதாரம் இழந்து பாதிக்கப்படும் அவலம்போலீசார் உள்ளூர் டெம்போக்களை கட்டுப்படுத்தி கேரளாவுக்கு கொண்டு செல்லப்படும் லாரிகளை அனுமதிப்பதாக குற்றச்சாட்டு.





## அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டாரத்தில் அப்டா மார்க்கெட், தாழக்குடி பகுதியில் திடீர் ஆய்வு



கன்னியாகுமரி, ஆக.13-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் புகையிலை ஒழிப்பு பணிகள் தீவிரம் அடைந்து உள்ளது. கன்னியாகுமரி மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் ஜெயராமபாண்டியன் தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அடங்கிய குழுவினால் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டாரத்தில் அப்டா மார்க்கெட், தாழக்குடி பகுதியில் இன்று திடீர் ஆய்வு செய்யப்பட்டது.

தாழக்குடி பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில், கடை வளாகத்திற்குள் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும், கடைக்கு வெளியே உள்ள சுற்றுப்புறங்களில் சோதனை செய்த போது தென்னை மட்டை மற்றும் விறகுகளுக்கு இடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 'கூல் லிப்' மற்றும் 'கணேஷ்' பிராண்ட் மெல்லும் புகையிலை பாக்கெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

மொத்தமாக மூன்று கடைகளில் இருந்து 120 கிலோ எடையுள்ள அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன் கடைகள் மூடப்பட்டன. மேலும், ஒவ்வொரு கடை உரிமையாளருக்கும் தலா ரூ 25,000 ரூபாய் வீதம் மொத்தம் ரூ 75000 அபராதமும் உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.மேலும், இது போன்ற தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனை மற்றும் உணவின் தரம் குறித்த புகார்களை 9444042322 என்ற வாட்சப் எண்ணிலும் தெரிவிக்கலாம் என்று கன்னியாகுமரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.,





## சோழிங்கநல்லூர், புழுதிவாக்கம், சுமங்கலி மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

சோழிங்கநல்லூர், ஆக.13-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, இடம் : சென்னை மாநகராட்சி 14 மண்டலம், பகுதி 42, புழுதிவாக்கம், மெயின் ரோடு, சுமங்கலி மண்டபத்தில் (ஆகஸ்ட் : 12) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் மற்றும் 14வது மண்டல குழு தலைவர், எஸ். வி. ரவிச்சந்திரன் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார்கள். 186 வது மாமன்ற உறுப்பினர், ஜே.கே.மணிகண்டன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் ஆணையர், ஆர். முரளி பொதுமக்களிடம் முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ் பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மக்களுக்கு சான்றிதழை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணபடும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு அரசின் மூலம் அனைத்து துறைகளின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது



கன்னியாகுமரி, ஆக.13-

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம் மருங்கூர் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஏழை எளிய கிராமப்புற மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்களை அறிவித்து அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை அளிக்கும் திட்டம், மக்களை தேடி மருத்துவம், சாலை, பேருந்து, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டங்கள். இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் வரும் முன் காப் போம் திட்டம், நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது. முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் குறித்தும், தொழிலாளர்களை தேடி மருத்துவம், முதலமைச்சரின் மகளிர் விடியல் பயணத்திட்டம் ஊரக பகுதிகளில் மக்களுடன் முதல்வர். உங்களைத்தேடி உங்கள் ஊரில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பணியின் போது காலமானவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கியது ஆகியவை குறித்தும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படு த்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்தது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கியது. உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்துகொண்டு பயன்பெற்றார்கள்.





## பழனியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் முதியோர்கள் சந்தோஷத்துடன் ரேஷன் பொருட்கள் வாங்கி செல்கின்றன

திண்டுக்கல், ஆக.13-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் இல்லம் தேடி குடும்ப அட்டை தாரர்களுக்கு பொருட்கள் வழங்கும் திட்டமான, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் இன்று முதலமைச்சர் தொடங்கியதைத் தொடர்ந்து பழனி நகரம் 7 வது மற்றும் 8 வதுவார்டு கடை எண் 9 இல், பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ செந்தில்குமார் வழிகாட்டுதலோடு, பழனி சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர், மற்றும் கூட்டுறவு சார்பாதிவாளர் செந்தில் வேல் பாண்டியன் பயனாளிகளின் இல்லம் தேடிச் சென்று பொருட்களை வழங்கினர்., நிகழ்வில் நகர்மன்ற மூத்த உறுப்பினர் .சுரேஷ் நகர்மன்ற உறுப்பினர் இந்திரா திருநாவுக்கரசு,உட்பட கூட்டுறவு துறை அலுவலர்கள், மற்றும் கழக உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## பம்மல் அருள்மிகு தண்டுகாரை ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 47ஆம் ஆண்டு தீமிதி திருவிழா, இன்னிசை நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது





பம்மல், ஆக.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக் குட்பட்ட பம்மல் காந்திநகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டுக்கரை ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 47 ஆம் ஆண்டு ஆடி தீமிதி திருவிழாவை முன்னிட்டு இன்னிசை நிகழ்ச்சி பம்மல் தெற்கு பகுதி செயலாளரும் 1வது மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி தலைமையில் பம்மல் தெற்கு பகுதி தொண் டரணி அமைப் பாளர் வே.க. புஷ்பராஜ் மற்றும் 11வது வட்டக் கழக செயலாளர் சாலா என்கின்ற சுகுமாரன் ஆகியோர் வரவேற்பிலும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வே.க.தன்ராஜ் ஏற்பாட்டில் இன்னிசை கச்சேரி மிக சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்துகொண்டு இன்னிசை கச்சேரி தொடங்கி வைத்து கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தனர்

இதில் வினோத் குமார், ரூபன், ஜீவா, யுவராஜ், இன்பராஜ், முகமது அலி, ஜெயச்சந்திரன், அரவிந்த், வஜாகத் அலி, ஆகாஷ் மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழகச் செயலாளர்கள் கழகம் முன்னோடிகள், செம்மொழி செலக்ட் கபடி குழு நண்பர்கள், பவர் ஸ்டார் நண்பர்கள், டி.எஸ் நண்பர்கள், மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு இன்னிசை கச்சேரியை பார்த்து ரசித்து மகிழ்ந்தனர்

## காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் தி.வேல்முருகன் ஆகியோர் தலைமையில் போதை பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு





சிவகங்கை, ஆக.13-

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால், காணொலி காட்சி வாயிலாக ஏற்கப்பட்ட போதை பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வில், காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் திரு.தி.வேல்முருகன் அவர்கள் ஆகியோர் தலைமையில் போதை பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்த லைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சட்டமன்ற பேரவை உறுதிமொழி குழு உறுப்பினர்கள் திரு.இரா.அருள் அவர்கள் (சேலம் மேற்கு தொகுதி), திரு.சா.மாங்குடி அவர்கள் (காரைக்குடி தொகுதி), திரு.எம்.கே.மோகன் அவர்கள் (அண்ணா நகர் தொகுதி), திரு.எஸ். ஜெயக்குமார் அவர்கள் (பெருந்துறை தொகுதி), சட்டமன்ற பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் அவர்கள், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், சட்டமன்ற பேரவையின் துணைச் செயலாளர் திரு. ஸ்ரீ.ரா. ரவி, சார்புச் செயலாளர் திருமதி த.பியூலஜா, உதவி இயக்குநர் (கலால்) திரு.ரெங்கநாதன், காரைக்குடி அழகப்பா பல்கலைகழக பதிவாளர் திரு.செந்தில்ராஜன் மற்றும் மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மதுவிலக்கு மற்றும் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு தமிழகம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, போதைப்பொருட்களை ஒழிக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் " போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாடு" என்ற தலைப்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை தமிழகம் முழுவதும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக, இன்றையதினம் (11.8.2025) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால், காணொலி காட்சி (Video Conferencing) வாயிலாக போதைத்தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் மேற்கண்ட விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியானது காரைக்குடி, அழகப்பா பொறியியல் கல்லூரி வளாக கூட்டரங்கில் சிறப்பாக நடைபெறுகிறது.

இந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்வினை போன்று, அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் (நகராட்சிகள் / மாநகராட்சிகள்), சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள், இளைஞர் நற்பணி மன்றங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள், பொதுமக்கள் மற்றும் சமூக பிரதிநிதிகள் ஆகியோர்களால் போதைத்தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான உறுதிமொழி ஏற்கும் நிகழ்வும் நடைபெறுகிறது.

இவ்வகையாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கான நோக்கமானது, போதைப் பொருள், சமூகத்தை முற்றிலும் அழிப்பது மட்டுமல்லாமல், அனைத்து வகையான நோய்களுக்கும் அடிப்படையாக அமைகிறது. எனவே, போதைப் பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கு உலக நாடுகள் ஒருங்கிணைந்து, போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்கிட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டுள்ளது.

குறிப்பாக, இந்தியாவின் எதிர்கால தூண்களாக விளங்கி வரும், மாணவ செல்வங்கள் வளமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாகவும் திகழ்ந்திட வேண்டும். சமூக பொறுப்பு உணர்வுடன் நல் வழியில் செயல்பட்டு, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்பதை தங்களது தலையாய கடமையாக கொண்டு செயல்பட வேண்டும். போதை பொருள் பயன்பாடற்ற சமுதாயமாக உருவாக்குவதற்கு தங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பு இருந்திடல் வேண்டும்.

அதற்கு அடிப்படையாகவும், தங்களுக்கு ஆக்கபூர்வமான சிந்தனைகளை உருவாக்குவதற்கும் தமிழக அரசின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.



# மாநில அளவில் மல்யுத்த போட்டியில் தங்க பதக்கம் வென்ற குமரி விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு தெரிவித்தார் எம்பி விஜய்வசந்த்

கன்னியாகுமரி, ஆக.13-

சேலத்தில் தமிழ்நாடு அமெச்சூர் மல்யுத்த சங்கத்தின் சார்பில் மாநில அளவிலான மல்யுத்த போட்டிகள் இரண்டு நாட்கள் நடந்தது. இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். வயது, எடையின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன

இந்த போட்டியில் கன்னியாகுமரி மாவட்டம் உட்பட தமிழ்நாட்டில் இருந்து அனைத்து மாவட்டங்களை சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இதில் குமரி மாவட்டத்தில் இருந்து மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் தங்க பதக்கம் வென்ற ஹரிஷ், வெள்ளி பதக்கம் வென்ற சிபிகிருஷ்ணன், பெண்களுக்கான ஜூனியர் போட்டிகளில் மாவட்ட அளவில் தங்க பதக்கம் வென்ற ஆசிஹா, பவ்யா மற்றும் பயிற்சியாளர் நிகேஷ், ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ராதா கிருஷ்ணன் ஆகியோரை கன்னியாகுமரி பாராளு மன்ற உறுப்பினர் விஜய்வ சந்த் பாராட்டினார்.

# முதுகுளத்தூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை பார்வையிட்டு பொதுமக்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இம்முகாமை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வேண்டுகோள்



இராமநாதபுரம், ஆக.13-

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள்; முன்னிலையில், மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவிக்கையில்,

மக்கள் அரசு அலுவலகங்களை தேடி வந்த நிலையை மாற்றி மக்கள் தேடி அரசு அலுவலர்கள் வருகை தந்து கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையிலான உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள். இதன்மூலம் நகர் பகுதி முதல் கிராம பகுதிகள் வரை அனைத்து இடங்களுக்கும் அரசு துறைகள் சென்று முகாமிட்டு மக்களின் கோரிக்கைகளை மனுக்களாக பெற்று உடனடி நடவடிக்கைக்காக பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில் இன்று முதுகுளத்தூர் பேரூராட்சி பகுதிக்கு இம்முகாம் நடைபெற்று வருகிறது.

இம்முகாமில் நகர்ப்புறத்தில் 15 அரசுத்துறைகளில்; 46 சேவைகள் வழங்கிடும் வகையிலும், ஊரகப்பகுதியில் 13 அரசுத்துறைகளில் 43 சேவைகள் வழங்கிடும் வகையில் அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்களை உடனுக்குடன் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுவதுடன் மனுக்கள் மீது 45 தினங்களுக்குள் தீர்வு வழங்கிடும் வகையில் பணிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்; 4 நகராட்சிகள், 7 பேரூராட் சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்களில் 30.09.2025 வரை 217 முகாம்கள் நடைபெறுகின்றன. முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் அப்பகுதியை சேர்ந்த மக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை வழங்கி பயன்பெற்றிட வேண்டுமென மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் தோட்டக்கலைத்துறையின் மூலம் விண்ணப்பித்த பயனாளிகளுக்கு விதை தொகுப்புகளை மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ஞா. சரவணபெருமாள் அவர்கள், முதுகுளத்தூர் வட்டாட்சியர் திரு.கோபிநாத் அவர்கள், முதுகுளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.செல்வராஜ் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# கோவிலம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

கோவிலம்பாக்கம், ஆக.13-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் (ஆகஸ்ட் : 12) நடைபெற்றது. சோழிங்க நல்லூர், எம்.எல்.ஏ, ச. அரவிந்த் ரமேஷ் முகாமை துவக்கி வைத்தார். பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும் உதவிகளையும் புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன் செய்து கொடுத்தார். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகள் எம்.எல்.ஏ, வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய குழு பெருந்தலைவர், சங்கீதா பாரதி ராஜன் , மாவட்ட பிரதிநிதி, 6 வது, வார்டு கவுன்சிலர், ஆர். சொக்கலிங்கம் மற்றும் அனைத்து துறைகள் சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மீன்பிடி உரிமையினை, 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித்தலைவர் தி கா.பொற்கொடி தகவல்




சிவகங்கை, ஆக.12-

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டிலுள்ள பாதரக்குடி, சங்காரபுரம், அமராவதி புதூர் மற்றும் செஞ்சை நாட்டார் ஆகிய 4 கண்மாய்களின் மீன்பிடி உரிமையினை 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் சிவகங்கை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநரால் வரவேற்கப்படுகின்றன.

மேலும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் குறித்த விவரங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு www. tntenders.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விபரங்கள் பெறலாம். மாற்றங்கள் ஏதேனும் இருருப்பின் மேற்காணும் இணையதளம் மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும். தெளிவுரைகள் மற்றும் விளக்கங்களுக்கு, சிவகங்கை மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை 04575 240848 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது adfsivaganga@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாகவோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.





# ஆங்கிலேயர் ஆட்சிக்கால எல்லைக் கல் கண்டுபிடிப்பு

காரைக்குடி, ஆக.13-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஆங்கில ஆட்சியின்போது இருந்த ராமநாதபுரம் மாவட்டத்தையும், புதுக்கோட்டை அரசையும் பிரிக்கும் எல்லைக்கல் ஒன்று தற்போதைய சிவகங்கை மாவட்டம் நெற்குப்பைக்கும் புதுக்கோட்டை மாவட்டம் வேந்தன்பட்டிக்கும் நடுவே உள்ள பள்ளத்துப்பட்டி விலக்கு அருகே புதர் மண்டிய இடத்தில் காணப்பட்டது. காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா மற்றும் புதுக்கோட்டை தொல்லியல் கழகத் தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் நடத்திய கள ஆய்வில் அந்த எல்லைக்கல்லைக் கண்டறிந்து ஆய்வு செய்தனர். பின்னர் அதுபற்றி அவர்கள் தெரிவித்ததாவது,

ஆங்கிலேயர் ஆட்சியின்போது சென்னை ராஜதானியில் நிர்வாக பொறுப்பில் உள்ள பல பகுதிகளும் ஏறத்தாழ ஒரே அளவாக இருக்க வேண்டும் என்ற கருத்தின்படி சர் வில்லியம் மேயர் என்ற ஐசிஎஸ் அதிகாரியை 1902 ல் அரசாங்கம் நியமித்து அவரிடமிருந்து 1904இல் அறிக்கையைப் பெற்றது. 1910 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இங்கிலாந்தில் உள்ள இந்திய அமைச்சர் ராமநாதபுரம் மாவட்டத்தை ஏற்படுத்துவது உட்பட சர் வில்லியம் மேயரின் மாவட்டத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கினார்.

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் சில பகுதிளை அந்த மாவட்டங்களிலிருந்து பிரித்து 1910 ஆம் ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயரில் ஒரு புதிய மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. இராமநாதபுரம் கோட்டத்தில் ராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி அருப்புக்கோட்டை ஆகிய வட்டங்களும் தேவகோட்டை கோட்டத்தில் திருப்பத்தூர், திருவாடானை, சிவகங்கை, சிவகங்கை ஜமீனைச் சேர்ந்த திருப்புவனம் வட்டங்களும், சாத்தூர் கோட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் வட்டங்களும் இடம்பெற்றிருந்தன. மாவட்டத்தை உருவாக்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்காகத் தனி அலுவலராக நியமிக்கப்பட்ட ஜே.எஃப். பிரையன்ட், மாவட்டத்தின் முதல் கலெக்டராகவும் மாவட்ட மாஜிஸ்டிரேட்டாகவும் நியமிக் கப்பட்டார். புதுக் கோட்டை சமஸ்தானம் 1640ஆம் ஆண்டு ஆவுடைராயத் தொண்டைமான் என்பவாரால் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பின்னர் ரகுநாத ராய தொண்டைமான் காலத்தில் புதுக்கோட்டை தனி சமஸ்தானமாக மாறியது.

புதுக்கோட்டை சமஸ்தானம் பல்வேறு காலக்கட்டங்களில் ஆங்கிலேயருக்கு இணக்கமாக இருந்து தன் அரசைப் பாதுகாத்து வந்தது. 1801 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இருந்த பாளையங்கள் எல்லாம் ஆங்கில அரசால் ஜமீனாக மாறியபோதும், புதுக்கோட்டை சமஸ்தானம் மட்டும் தனியரசாகவே விளங்கியது.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1948 மார்ச் மாதம் 3 ஆம் நாள் புதுக்கோட்டை சமஸ்தானம் மன்னர் ராஜகோபாலத் தொண்டைமானால் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது கண்டறியப்பட்டுள்ள, நூறு ஆண்டுகளுக்கு முந்தைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த இந்த எல்லைக்கல் தற்போதைய புதுக் கோட்டை, ராம நாதபுரம் மாவட்டத்தின் வேறு பகுதிகளில் காணப்படாத நிலையில், இது பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு ஆவணமாகக் கருதப் படுகிறது.

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, முதியோர்களின் வீடுகளுக்கு சென்று குடிமைப்பொருட்களை வழங்கினார்கள்

கன்னியாகுமரி, ஆக.13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூட்டுறவுத்துறையின் சார்பில் சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகரில் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை” துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட குடிமை பொருட்களை விநியோகம் செய்யப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தி னை துவக்கி வைத்ததை த்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை ஊராட்சி ஒன்றியம் திடல் ஊராட்சிக்குட்பட்ட இரத்தினபுரம் மற்றும் தடிக்காரன் கோணம் ஊராட்சிக் குட்பட்ட கீரிப்பாறை தொழிலாளர் நகர் பகுதியை சேர்ந்த வயது முதிர்ந்தோர் வீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று குடிமைப்பொருட்களை வழங்கி தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் போது முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தார்கள். இத்திட்டத்தின் நோக்கம் மாநிலத்தில் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களை கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதேயாகும்.

அதனடிப்படையில் கூட்டுறவுத்துறையின் கீழ் வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நியாய விலைக்கடைகளுக்கு வந்து கைரேகை பதிவு செய்து, ரேசன் பொருட்களை வாங்க சிரமமாக இருப்பதையும், அவர்களுக்கு வீடு தேடி வந்து ரேஷன் பொருட்களை வழங்க வேண்டும் என்ற நோக்கில் மாநிலத்திற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் 70 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன்பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்துள்ளார்கள்.



அதன் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன், உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்க நியாய விலைக்கடைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 764 நியாய விலைக்கடைகளைச் சார்ந்த 43730 குடும்ப அட்டைகளில் உள்ள 65343 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறன் பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப் பட்டுள்ளது. அதன்ஒருபகுதியாக இன்று கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தோவாளை ஊராட்சி ஒன்றியம், திடல் ஊராட்சிக்குட்பட்பட்ட கடுக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் ரெத்தினபுரம் பகுதி நேர நியாயவிலைக்கடை மற்றும் திடல் நியாய விலைக்கடைகளைச் சார்ந்த 55 குடும்ப அட்டைகளில் உள்ள 64 பயனாளிகளுக்கும், அழகியபாண்டியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் கீரிப்பாறை, பாலமோர், பரளியாறு போன்ற மலைப்பகுதிகளில் உள்ள 55 குடும்ப அட்டைகளில் உள்ள 89 பயனாளிகளுக்கும் அவர்தம் இல்லங்களுக்கே சென்று குடிமைப்பொருட்கள் விநியோகம் செய்யும் திட்டம் துவங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கப்பட உள்ளது. மின்னணு எடைத்தராசு, e-Pos இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாக எடுத்து சென்று தகுதியுள்ள பயனாளர்களின் இல்லங்களுக்கே நேரில் சென்று வழங்குவார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நாகர் கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், இணை பதிவாளர் கூட்டுறவு கடன் சங்கம் திருமதி.சிவகாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.புஷ்பா தேவி, துணை பதிவாளர் திரு.முருகன், தோவளை வட்ட வழங்கல் அலுவலர் திருமதி.மரிய ஸ்டெல்லா, முன்னாள் தோவாளை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.பூதலிங்கம், தடிக்காரன்கோணம் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் திரு.பிராங்கிளின், துறை அலுவலர்கள், பயனாளிகள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (12.08.2025) காணொலி காட்சி வாயிலாக கன்னியாகுமரி மாவட்டம் பள்ளம்துறை மற்றும் கோடிமுனை பகுதியில் மேம்படுத்தப்பட்ட மீன்இறங்குதளத்தினை திறந்துவைத்ததைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, குத்துவிளக்கேற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, கல்வெட்டினை திறந்து வைத்தார்கள். உடன் உதவி ஆட்சியர் பயிற்சி திரு.ராகுல் குமார், துணை இயக்குநர் மீன்வளத்துறை திரு.சின்னகுப்பன் உட்பட பலர் உள்ளார்கள்.



## மதுரை ஸ்ரீ பாடசாரி கங்கை அம்மன் ஆடிதிருவிழா முன்னிட்டு, குடியாத்தம் புதிய நீதி கட்சியின் சார்பில் அன்னதான விழா

வேலூர், ஆக.13-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, மோடி தற்போது மதுரை மத்தியப்பள்ளி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ பாடசாரி கங்கை அம்மன் ஆடித் திருவிழா முன்னிட்டு புதிய நீதி கட்சியின் சார்பாக மாபெரும் அன்னதானம் வழங்கும் விழா, மண்டல செயலாளர் ப.சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் வெங்கடேசன், சசிகுமார், மோகன், உமா மகேஸ்வரி முன்னிலை வகித்தனர், மாவட்ட செயலாளர் பிரம்மாஸ் செந்தில், நகர செயலாளர், கைத்தறி காவலன் எஸ்.ரமேஷ், அமுமுக மாவட்ட இளம் பெண்கள் பாசறை செயலாளர் கௌதமி சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மாபெரும் அன்னதானம் வழங்கும் விழாவை சிறப்பித்தனர்.




■ மதுரை அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் வாவிடமருதூர்,பண்ணைகுடி, அச்சம்பட்டி,பி.மேட்டுபட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை சோழவந்தான் சட்ட மன்ற உறுப்பினர் வெங்கடேசன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார். முகாமில் தாசில்தார் பார்த்திபன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வள்ளி, கலைச்செல்வி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரேணுகா,கண்ணன், ஜெயபிரகாஷ்,சுந்தர்ராஜ், ஊராட்சி செயலாளர்கள் தாய்மொழி,முருகேஸ்வரி, நாகராஜ் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் குலமங்கலம் ஊராட்சிக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை ஊராட்சி உதவி இயக்குனர் அரவிந்தன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி,பேராட்சி பிரேமா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரம்யா,ஊராட்சி செயலாளர் அய்யங்காளை மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





## தேவகோட்டைஆனந்தா கல்லூரி போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்பு நிகழ்வு

தேவகோட்டை, ஆக.13-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்பு நிகழ்வு கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக தேவகோட்டைகாவல் துணைத் கண்காணிப்பாளர் கௌதம் கலந்து கொண்டு மாணாக்கர்களிடம் உறுதிமொழி எடுத்துக் கொண்டு பேசியதாவது, போதையில்லா தமிழகத்தை மாற்றுவது இன்றைய இளைஞர்களின் கையில்தான் உண்டு என்றும் போதையினால் இன்றைய இளைய சமுதாயம் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருவதையும் சான்றுகளுடன் சுட்டிக்காட்டி எடுத்துரைத்தார் ஆகவே மாணவர்கள் போதை எனும் பழக்கத்தில் இருந்து விடுபடுவதோடு தங்களை சுற்றியுள்ள உறவுகளையும் அதிலிருந்து காக்கப்பட வேண்டும். எதிர்கால இந்தியா இன்றைய இளைஞர்கள் கையில் தான் உண்டு என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று பேசினார். இந்நிகழ்வில் ஆனந்தா கல்லூரியின் துணை முதல்வர்கள் அருட் தந்தை முனைவர் டென்சிங் ராஜன் முனைவர் விக்டர் பெனவெட் ராஜ் மற்றும் இருபால் பேராசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டனர்..



## காளையார்கோவிலில் தேசிய நூலகர் தினக் கொண்டாட்டம்

காளையார்கோவில், ஆக.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கிளை நூலகத்தில் காளையார் கோவில் ஊதிய மைய நூலகர்கள் வாசகர் வட்டம் இணைந்து தேசிய நூலகர் தினம் கொண்டாடப்பட்டது. வாசகர் வட்ட உறுப்பினர் தனசேகரன் தலைமை வகித்தார். ஓய்வு பெற்ற கிளை நூலகர்கள் அந்தோணிசாமி ஜோதிபாசு வாசகர் வட்ட உறுப்பினர் குணாஹாசன் முன்னிலை வகித்தனர். காளையார் கோவில் கிளை நூலகர் நல்நூலகர் சகாயமேரி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர் மருத்துவர் நாராயணமூர்த்தி நூலகர் அனைவருக்கும் நூலாசிரியர் செந்தாமரை எழுதிய லட்சுமி வந்தாள் புத்தகத்தை நினைவு பரிசாக வழங்கியும் தன்னை பெரும்புரவலராக இணைத்துகொண்டு நூலகர் பணி சிறக்க வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்திய நூலக தந்தை ரங்கநாதனின் பிறந்த தினம் தேசிய நூலக தினமாக கொண்டாட ப்படுகிறது என்றும் நூல்களை பொருள்வாரியாக பிரித்து அடுக்குவதற்கான அறிவியல் பூர்வமான அணுகுமுறையான கோலன் பகுப்பு முறை கண்டுபிடித்து உலகிற்கே வழங்கிய சென்னை பல்கலைக்கழக நூலகத்தின் முதல் நூலகருக்கு புகழாரம் சூட்டினார். சூசையப்பர்பட்டணம் கிளை நூலகர் கீதாராணி நன்றி கூறினார். நாட்டரசன்கோட்டை கிளை நூலகர் குமரேஸ்வரி இளையான்குடி கிளை நூலகர் ஆனந்தன் இடையமேலூர் கிளை நூலகர் காதர் பீவி கண்ணங்குடி கிளை நூலகர் ஜெயஜோதி இளையான்குடி புதூர் கிளை நூலகர் மீனாள் கொல்லங்குடி கிளை நூலகர் அலமேலு ஆண்டிச்சூரணி ஊர்ப்புற நூலகர் சகாயராணி புலிக்கண்மாய் ஊர்ப்புற நூலகர் ஜலி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





## காட்பாடி காங்கேயநல்லூர், ஸ்ரீ ராகவேந்திர சுவாமி ஆலயத்தில் சிறப்பு பூஜை அலங்காரத்துடன் மத்ய ஆராதனை விழா

### 1500 க்கும் மேற்பட்டோருக்கு மாபெரும் அன்னதானம்

வேலூர், ஆக.13-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கேயநல்லூரில் ஸ்ரீ ராகவேந்திர சுவாமி பிருந்தாவன பிரவேசம் அடைந்த நாளை முன்னிட்டு சிறப்பு பூஜை அலங்காரத்துடன் பகல் 12.00 மணிக்கு, சுமார் 1500க்கும் மேற்பட்டோருக்கு தலைவாழை இலையுடன் அறுசுவை உணவுடன் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி, 10வார்டு, மாநகராட்சி மாமன்ற உறுப்பினரரும், அதிமுக 5வது வட்ட செயலாருமான கே.பி.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் அதிமுக மாமன்ற உறுப்பினர் கே.பி.ரமேஷ் கலந்து கொண்டு சிறப்பு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு அன்னதானத்தை துவக்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து ஆலயம் சார்பில் அதிமுக நிர்வாகிகளை பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

## மின்தடை அறிவிப்பு



சிவகங்கை, ஆக.13-

சிவகங்கை மாவட்டம் நெல் முடிகரை திருப்பாச்சேத்தி ஒட்டப்பாளையம் ஆகிய துணை மின் துணை மின் நிலையங்களில் நாளை (ஆக 14) திருப்புவனம், புதூர், பழையூர், செல்லப்பநேந்தல், லாடனேந்தல், அல்லிநகரம், கீழராங்கியம், மேலராங்கியம், வயல்சேரி, கலியாந்தூர், மேலவெள்ளூர், கீழவெள்ளூர், மாங்குடி, அம்பலத்தாடி, மணலூர், அகரம், ஒத்தவீடு, மடப்புரம், திருப்பாசேத்தி, பழையனூர், மாரநாடு, ஆவரங்காடு, தஞ்சாக்கூர் மேலச்சொரிக்குளம், வெள்ளிக்குறிச்சி, முதுவன் திடல். பொட்டபாளையம், புலியூர், கொந்தகை, கீழடி, சொட்டதட்டி, சைனாபுரம், கரிசல்குளம், காஞ்சிரங்குளம், முக்குடி, செங்குளம், ஆகிய துணை மின் நிலையங்களில் நாளை காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின்செயற் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், பாதுகாக்கப்பட்டு வரும் மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## திருமங்கலம் நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் நேரில் ஆய்வு

### நகராட்சி ஆணையர் அசோக் குமார் உள்ளிட்டோர் பங்கேற்பு

மதுரை, ஆக13-

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாட்டு பணிக்காக சோழவந்தான் ரோட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்ட வரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த குடிநீர் மேம்பாட்டு பணிக்காக ரூபாய் 52.53 கோடி மதிப்பீட்டில் திருமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட சோழவந்தான் ரோடு,ரதிராஜன் நகர், மதுரை ரோடு,கற்பகம் நகர் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு வருகிறது.மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியில் முகமதுஷாபுரம் கிழக்கு 4ஆவது தெருவில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 46.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பூங்காவினை ஆய்வு செய்து பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது பூங்காவில் பழுதடைந்துள்ள சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்களை சரி செய்யவும், செடி மரங்களை முறையாக தண்ணீர் ஊற்றி பராமரித்து, நாள்தோறும் பூங்காவினை தூய்மையாக வைத்துக்கொள்ள அறிவுறுத்தினார். உடற்பயிற்சி கூட உபகரணங்களுடன் பூங்காவினை மேம்படுத்தி முன்னோடியான பூங்காவாக உருவாக்க உத்தரவிட்டார் .ஆய்வின் போது நகராட்சி ஆணையர் அசோக் குமார், நகராட்சிபொறியாளர் ரத்தினவேல் ஆகியோர் உடனிருந்தனர்





## அரசு பள்ளியில் தேசிய நூலகர் தினத்தில் புத்தக வாசிப்பு

காளையார் கோவில், ஆக.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (மேற்கு) வகுப்பறையில் தேசிய நூலகர் தினத்தை முன்னிட்டு புத்தக வாசிப்பு நடைபெற்றது. மாணவி கெலினா அனைவரையும் வரவேற்றார். புத்தக வாசிப்பை பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜஸ்டின் திரவியம் தொடங்கி வைத்தார். மாணவ மாணவிகள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட புத்தகங்களை ஆர்வமுடன் வாசித்து வாசித்தவற்றை அனைவருக்கும் முன்பாக சிறப்பாக எடுத்துக் கூறினார்கள். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அனைத்து மாணவ மாணவிகளுக்கும் குழந்தைகள் துளிர் இதழை வழங்கி புத்தக வாசிப்பின் முக்கியத்துவத்தையும் இந்திய நூலகத் தந்தை ரங்கநாதன் அவர்களின் சிறப்புகளையும் எடுத்துக் கூறினார். மாணவன் சாய் ரோஷன் நன்றி கூறினார்.



## தாம்பரத்தில் இந்து திராவிட மக்கள் கட்சியினர் அவிநாசியில் ரிதன்யா என்ற பெண் வன்கொடுமை செய்து தற்கொலை தூண்டிய கணவர் குடும்பத்தினர சிறையில் வைத்து நீதிவழங்க் கோரி தமிழக முதல்வர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தாம்பரம், ஆக.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பேருந்து நிலையம் அருகே இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் தேசிய தலைவர் டாக்டர் ரமேஷ்பாபுஜி தலைமையில் திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் ரிதன்யா என்ற பெண்ணை கணவர் வீட்டில் வன்கொடுமை செய்ததால் கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் காரணம் என ஆடியோ பதிவு செய்து தற்கொலை செய்து கொண்டார். இந்த தற்கொலைக்கு தூண்டிய ரிதன்யா கணவர் மற்றும் அவரது குடும்பத்தினரை சிறையில் வைத்து நீதிவழங்க கோரியும் இந்த




ஆர்ப்பாட்டத்தின் முலமாக தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரி கண்டன கோஷமிட்டவாறு 100 க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் இந்து திராவிட மக்கள் கட்சி நிர்வாகிகள், மகளிரணியினர் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161